மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (11-11-2010) வியாழக்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-46 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

19. மூன்றாம் நிலை நகராட்சிகளை சிறப்பு நிலை நகராட்சிகள், தேர்வு நிலை நகராட்சிகள், முதல் நிலை நகராட்சிகள் மற்றும் இரண்டாம் நிலை நகராட்சிகள் என அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வகைப்பாடு செய்தது குறித்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறையின் 9-8-2010 ஆம் நாளிட்ட 154 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V/1920) 304(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

20. யாதொரு வணிகர், முதலாம் விவர அட்டவணையின் பதிவின்கீழ் வருகிற திரைப்படத் துறை சார்ந்த சாதனங்கள் மற்றும் படப்பிடிப்பு அரங்குகளில் உள்ள திரைப்படச் சாதனங்கள், ஆய்வுக்கூடங்கள், ஒலிப்பதிவு அரங்குகள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் உரிமை குறித்தும், ஆடியோ, வீடியோ, சாட்டிலைட் உரிமைகளைக் குத்தகைக்கு விடுவது குறித்தும் செலுத்தத்தக்க வரியிலிருந்து அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்கு விலக்களித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி2) துறையின் 13-8-2010 ஆம் நாளிட்ட 137 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

21. 2009-2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

22. 2009-2010 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2010-2011 ஆம் ஆண்டுக்கான "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

2. 2010-2011 ஆம் ஆண்டுக்கான கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

3. 2010-2011 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

4. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதின்மூன்றாவது அறிக்கை. (2009-2011)

5. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினான்காவது அறிக்கை. (20092011)

6. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினைந்தாவது அறிக்கை. (2009-2011)

7. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினாறாவது அறிக்கை. (2009-2011)

8. பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று பதினேழாவது அறிக்கை. (2009-2011)

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் பத்தாவது அறிக்கை. (2009-2011)

உண்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS